**மார்ச் – 27**

# தமிழ்நாடு செய்திகள்

## பூச்சி அருங்காட்சியகம்

- தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் பூச்சி அருங்காட்சியகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் திறந்துவைத்தார்.
- இது தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வேளாண் பூச்சியியல் துறையில் நிறுவப்பட்டுள்ளது.
- இந்த அருங்காட்சியகத்தில் 50 இனங்களைச் சேர்ந்த 20,000 பூச்சிகள் இடம் பெற்றுள்ளன.



- இந்த அருங்காட்சியகத்தில் பயன்தருபவை மற்றும் இடர்தருபவை ஆகிய இரு வகையைச் சேர்ந்த பூச்சியினங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.
- இது இந்தியாவின் முதல் பூச்சிப் பூங்கா என்ற பெருமையைப் பெற்றுள்ளது.
- 6,691 சதுர அடி பரப்பில் இந்த அருங்காட்சியகமானது கட்டப்பட்டுள்ளது. பூச்சியினங்களின் பல்வகைத் தன்மை, பூச்சி உயிரினங்கள், பயனுள்ள பூச்சியினங்கள், பூச்சியினங்கள் மற்றும் தாவரங்கள் மற்றும் கலாச்சார பூச்சியியல் (Cultural entomology) ஆகிய கருத்துருக்களின் அடிப்படையில் காட்சிப்படுத்துவதற்கானத் திரைகளுடன் கூடிய ஏழு ரேடியல் சுவர்கள் (Radial walls) இவ்வருங்காட்சியகத்தின் கண்காட்சிப் பகுதியில் உள்ளன.
- 27 பூச்சிகளின் வரிசைகளின் தேர்தெடுக்கப்பட்ட மாதிரிகள் (Curated specimen) இக்கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன.
- இவ்வருங்காட்சியகத்தில், பூச்சிகள் தொடர்பான செய்திகளை அளிப்பதற்காக தொலைக்காட்சித் திரைகள், முப்பரிமாண வடிவிலான பூச்சிகளின் வடிவங்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் கடைகளும் (Souvenir shop) இடம் பெற்றுள்ளன.


# தேசியச் செய்திகள்

## அச்சு இந்தியா 2018

- முதல் வரைகலை அச்சுகளின் சர்வதேசக் கண்காட்சியான, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் 'அச்சு இந்தியா 2018', லலித் கலா அகாடமியில் நடைபெற்றது. இதில் 17 நாடுகள் பங்கேற்றன.
- மொத்தம் 988 முன்பதிவுகள் செய்யப்பட்டிருந்த நிலையில், அவற்றின் 127 அச்சுகள் மட்டும் கண்காட்சியில் இடம் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டன.
- அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்ரீலங்கா, இத்தாலி, மெக்ஸிகோ, சீனா, இஸ்ரேல், சுவீடன், லித்துவேனியா, போலந்து, அர்ஜென்டினா, கிரீஸ், நேபாளம், வங்கதேசம் மற்றும் மொரீசியஸ் ஆகிய நாடுகள் இக்கண்காட்சியில் பங்கேற்றன. இந்த மாநாடு உலக நாடுகளின் ஆர்வத்தை வெளிக் கொண்டு வந்துள்ளது.

## மூன்றாவது மிகப்பெரிய மின்சார உற்பத்தியாளர்

- 2016 ம் நிதியாண்டில் இந்தியா 1,423 பில்லியன் யூனிட்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்து மூன்றாவது மிகப்பெரிய மின்சார உற்பத்தியாளராக உருவாகியுள்ளது மற்றும் மூன்றாவது மிகப்பெரிய மின்சார நுகர்வோராகவும் உள்ளது.




- சீனா (6,015 பில்லியன் யூனிட்கள்), அமெரிக்கா (4,327 பில்லியன் யூனிட்கள்) ஆகியவற்றைத் தொடர்ந்து இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- கடந்த ஏழு ஆண்டுகளில் 2017 ஆம் ஆண்டு வரையில், இந்தியாவின் மின்சார உற்பத்தி 34% ஆக அதிகரித்துள்ளது.

- இந்தியா தற்போது ஜப்பான் மற்றும் இரஷ்யாவைக் காட்டிலும் அதிக ஆற்றலை உற்பத்தி செய்கிறது.

# பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## அறிவியல் ஆலோசகர்

- கிருஷ்ணசாமி விஜய் ராகவன், இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- 2001 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட, 81 வயதாகும் அணு இயற்பியலாளர் R. சிதம்பரத்தைத் தொடர்ந்து கிருஷ்ணசாமி விஜய் ராகவன் இப்பொறுப்பை வகிக்க உள்ளார். R. சிதம்பரம் 16 ஆண்டுகளுக்கு மேலாக முதன்மை அறிவியல் ஆலோசகராகப் பதவி வகித்தார்.
- உயிரியல் அறிவியலுக்கான தேசிய மையத்தின் இயக்குநராகப் பணியாற்றிய விஜய் ராகவன், 2013 ஆம் ஆண்டு உயிரித் தொழில்நுட்பத் துறை செயலாளராக நியமிக்கப்பட்டார்.




*முதன்மை அறிவியல் ஆலோசகர்*

- முதன்மை அறிவியல் ஆலோசகர் எனும் பதவி, 1999 ஆம் ஆண்டு அடல் பிகாரி வாஜ்பாயி அரசினால் உருவாக்கப்பட்டது. இது அறிவியல் கொள்கை தொடர்பாக அனைத்து செயல்களிலும் அரசிற்கு ஆலோசனை வழங்கும் மிக உயர்ந்த பதவியாகும்.
- அறிவியல் தொடர்பான செயல்பாடுகளில் அரசிற்கு ஆலோசனை வழங்கும் மூன்று அறிவியல் அங்கங்களில் ஒன்றான முதன்மை அறிவியல் ஆலோசகர் பதவியானது அரசு மற்றும் அறிவியல் கழகங்களுக்கிடையேயான இடைமுகமாக செயல்படுகிறது.
- மற்ற இரண்டு அங்கங்களாவன,
    - பிரதமருக்கான அறிவியல் ஆலோசனைக் குழு
    - கேபினேட்டிற்கான அறிவியல் ஆலோசனைக் குழு
- மேற்கண்ட இரண்டும் அரசின் செயல்பாட்டின் கீழ் இல்லை.

- பாதுகாப்புத்துறை அமைச்சர், அவருக்கென்றுத் தனியாக ஒரு அறிவியல் ஆலோசகரைக் கொண்டுள்ளார்.

## UNESCO நிர்வாக மன்றம்

- UNESCO நிர்வாக மன்றத்தின் இந்தியாவிற்கானப் பிரதிநிதியாக முன்னாள் NCERT (National Council of Educational Research and Training) இயக்குநர் JS. ரஜ்புத்தை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் நியமித்துள்ளது.
- 58 இடங்கள் கொண்ட UNESCO நிர்வாக மன்றத்தின் உறுப்பினர்களின் பதவிக்காலம் 4 ஆண்டுகளாகும். UNESCOவின் அரசியலமைப்பு அங்கமான நிர்வாக மன்றம், பொது மாநாட்டு அமர்வினால் தேர்ந்தெடுக்கப்படுகிறது.
- இந்த மன்றம் பட்ஜெட் தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் நிறுவனங்களின் வேலை ஆகியவற்றை ஆராய்கிறது. நடைமுறையில், இம்மன்றமே UNESCOவின் அனைத்துக் கொள்கைகள் (Policies) மற்றும் திட்டங்கள் ஆகியவற்றிற்குப் பொறுப்பாகும்.



*JS ராஜ்புத் பெற்ற சிறப்புகள்*

- 2014ஆம் ஆண்டு இவருக்கு பத்ம ஸ்ரீ விருது வழங்கப்பட்டது.
- கல்வித்துறையில் இவரதுப் பங்களிப்பிற்காக மத்தியப் பிரதேச அரசால் இவருக்கு மகரிஷி வேத வியாசர் விருது வழங்கப்பட்டது.
- ஜூன் 15, 2015 அன்று பிரதமரால் வெளியிடப்பட்ட 'இந்தியாவில் இஸ்லாமியர்களின் கல்வி' என்ற புத்தகத்தை இவர் எழுதியுள்ளார்.

# விளையாட்டுச் செய்திகள்

## 100 ODI விக்கெட்டுகள்

- ஆப்கானிஸ்தான் லெக் ஸ்பின்னர் ரஷீத்கான் ODI (One Day International) போட்டிகளில் 100 விக்கெட்டுகள் வீழ்த்திய வேகப்பந்து வீச்சாளராக உருவாகியுள்ளார்.
- ரஷீத்கான் 44 விளையாட்டுகளில் இந்த சாதனையைப் படைத்துள்ளார். இதற்கு முன்னர் இச்சாதனையைப் படைத்த ஆஸ்திரேலியாவின் மிட்செல் ஸ்டார்க்கை விட

இது 8 ஆட்டங்கள் குறைவானதாகும்.

- மேற்கு இந்தியத் தீவுகளின் சாய் ஹோப் என்ற வீரரை LBW முறையில் வீழ்த்தி இரஷீத் தன்னுடைய 100வது விக்கெட்டை வீழ்த்தினார்.




## ஜாக்கி இளைஞர் கோப்பை

- ஜாக்கி இளைஞர் கோப்பை தொடக்கக் கால்பந்து போட்டியின் இறுதிச் சுற்றில் ஹாங்காங்கை 4-2 என்ற விகிதத்தில் இந்தியாவின் U-16 அணி வென்று சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.



- பெகே ஓரம், ரோகித் தணு மற்றும் லால் ரோகிமா ஆகியோர் கோல் அடித்தனர்.
- இது இவ்வணியின் மூன்றாவது தொடர் வெற்றியாகும். இதற்கு முன்னர் இவ்வணி சீனாவின் டெய்பியை 4-0 என்ற வித்தியாசத்திலும், சிங்கப்பூரை 3-1 என்ற வித்தியாசத்திலும் வென்றுள்ளது.
- பிபியனோ பெர்னான்டஸால் பயிற்சியளிக்கப்படும் இவ்வணி இதுவரை 22

போட்டிகளில் வெற்றி வாகை சூடியுள்ளது. இதில் தேசிய இளைஞர் அணி, சர்வதேச கிளப் மற்றும் அகடாமி அணி ஆகிய அணிகளுடன் விளையாடிய நட்பு ஆட்டங்களும் அடங்கும்.

## ஆசிய பில்லியார்ட்ஸ்

- பங்கஜ் அத்வானி, தனது பயிற்சி நண்பரான B.பாஸ்கரை 6-1 என்ற வித்தியாசத்தில் வென்று தனது ஆசிய பில்லியார்ட்ஸ் கோப்பையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.
- இந்த வெற்றியுடன் இவர், பில்லியார்ட்ஸ போட்டியில் 2017-2018க்கான காலக் கட்டத்தில் இந்திய, ஆசிய, உலக சாம்பியனாக வெற்றிவாகை சூடிய இந்தியராக தொடர்கின்றார்.
- இது ஆசிய அளவிலான கோல்ப் விளையாட்டில், அத்வானியின் 11வது தங்கப்பதக்கமாகும்.
- பெண்களுக்கான ஆசிய ஸ்நூக்கர் போட்டியில், தாய்லாந்தின் சிரிபாப்போர்ன் நுவான்தகம்ஜனை வென்று இந்தியாவின் அமீ காமேனி சாதனை படைத்துள்ளார்.




## CWG 2018

- ஆஸ்திரேலியாவின் கோல்டுகோஸ்ட் நகரில் நடக்க உள்ள காமன்வெல்த் தொடக்க விழாவில் P.V சிந்து இந்திய அணிக்காக இந்தியக் கொடியைத் தாங்கிப் பிடித்து செல்லவுள்ளார்.



- கிளாஸ்கோவில் 2014 ஆம் ஆண்டு நடந்த காமன்வெல்த் போட்டிகளில் பெண்களுக்கான ஒற்றையர் போட்டியில் P.V சிந்து வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- கடந்த மூன்று காமன்வெல்த் போட்டிகளில், கொடிதாங்கிச் செல்லும் கவுரவப் பொறுப்பு, சுடுதல் விளையாட்டுப் பிரிவு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.
- 2006 ஆம் ஆண்டு மெல்பர்னில் நடந்த காமன் வெல்த் போட்டிகளில் பங்கேற்ற இரட்டை டிராப் துப்பாக்கி சுடுதல் வீரரும் (Double Trap Shooter) தற்போதைய மத்திய விளையாட்டுத் துறை அமைச்சருமான ராஜ்ய வரதன் சிங் ரத்தோர் இந்தியக் கொடியைத் தாங்கிச் செல்லும் பொறுப்பைப் பெற்றார்.
- 2010ல் இந்தியாவில் நடந்த போட்டிகளின் போது இப்பொறுப்பை 2008 ஆம் ஆண்டின் ஒலிம்பிக் சாம்பியனான அபினவ் பிந்த்ரா பெற்றார்.
- துப்பாக்கிச் சுடுதல் வீரர் விஜய் குமார் இவ்வாய்ப்பை 2014ல் பெற்றார்.

- - - - - - - - - - - - - - -